1972 ஆகஸ்ட் 19]

Tourist Special Bus

* 112 Q.—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that a tourist special bus is to be run in Tiruchirappalli district, touching various tourist spots; and

(*b*) if so, whether there is any proposal to organise a similar tourist bus in Thanjavur district?

தனிச் சுற்றுலாப் பேருந்து

திரு. சா. கணேசன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுற்றுலா இடங்களைக் காணுவதற்கு வசதியாக தனிச் சுற்றுலாப் பேருந்து ஒன்றை விடவிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதே மாதிரியான தனிச் சுற்றுலாப் பேருந்து ஒன்றினைத் தஞ்சாவூர் மாவட்டத்திலும் விடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.

Menu in Harijan Welfare Students' Hostels

* 113 Q.—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the menu in Harijan Welfare Students' Hostels has been changed at present; and

(*b*) if so, the details thereof?

பின்தங்கியோர் ஹாஸ்டல்களில் உணவு முறைகள்

திரு. எஸ். எஸ் தென்னரசு : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பின்தங்கியோர் ஹாஸ்டல்களில் தற்போது உணவு முறைகள் மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) **காலை உணவு :** கோதுமை உப்புமா அல்லது பொங்கல், அல்லது கோதுமை நொய் அல்லது அரிசி நொய்யை வறுத்து உடைத்த பச்சைப்பயிறு 4 : 1 என்ற விகிதத்தில் கலந்து சமைத்த கஞ்சி அத்துடன் ஊறுகாய் அல்லது சட்டினி.

பகல் உணவு : சோறு, சாம்பார் அல்லது வேறு குழம்பு, அத்துடன் காய்கறிப் பதார்த்தம், மோர்.

மாலையில் : வேகவைத்து உப்பிட்ட பயிறு (சுண்டல்).

இரவு உணவு : சோறு, காய்கறிப்பொறியல், ரசம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, இதற்கு முன்பு என்னென்ன உணவுகள் கொடுக்கப்பட்டு வந்தன ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, இதற்கு முன்பு ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் இருபது ரூபாய் என்ற அளவில் வழங்கப்பட்டு வந்தது. இத்தொகையில் வேண்டிய சத்துணவு அளிக்கப்பட முடியவில்லை என்ற காரணத்தினால், இத் தொகை ரூபாய் இருபத்தைந்து என உயர்த்தப்பட்டது. முதலில் அரிசியை அதிகமாகத் தந்தார்கள். ஆனால் அதில் சத்தில்லை என்ற காரணத்தினால் 'சத்துணவு' எப்படிப்பட்ட திட்டத்தில் கொடுக்க முடியும் என்று யோசித்து, பூந்தமல்லியிலுள்ள பொதுச் சுகாதார நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு இந்த முறையில் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த உணவுத் திட்டம் எல்லா விடுதிகளிலும் இப்போது நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Operation of buses in Nationalised Zones

* 114 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there were any discussions between the representatives of this Government and Mysore Government for operating buses in Nationalised Zones; and

(*b*) if so, the details thereof?